**ஒரு மதம் அல்லது நம்பிக்கையை பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்.**

**புதுக்கவிதை**

# உலகின் விருந்தினர்கள்

வலி மீது வலி கொண்டு மானிடர்
கலி தந்த கலிகாலத்தில் இங்கு
நிஜமில்லா உலகில் நிலையற்ற - வாழ்வில்
மதம்ங்கொண்ட யானை போல்
மதவெறி கொண்டு திரிவது ஏனோ?

உலகின் விருந்தினர்கள் நாம் இங்கு
உதிரத்தால் ஒரே இனம் மாந்தர்கள்
எத்தனை பிரிவுகள் எமக்குள் நாம்
சாதி, மத, பேதம் என சண்டைகள்
ஆறறிவு மனிதனின் அறியாமை இதுவா?

ஆதிசிவனும், அல்லாவும், யேசுவும்,புத்தரும்
அகிலத்தில் போதித்தது அன்பாயிரு
மதங்கள் என நாம் பல பிரித்தாலும்
அவை கூறும் அறங்கள் ஒன்றே
அகிலத்தில் அனைவரும் இறைவனின்- பிள்ளைகள்

போதும் மனிதா உன்  ஆட்டங்கள்
பொல்லாத நோய்கள் அகிலத்தில் இன்று
இன்றிருப்போர் நாளை இல்லை
என்றுணர்ந்து வாழ் உன் வாழ்வை
அதுவே அகிலத்தின் அறமும் தர்மமும்.

மதி கொண்ட மனிதனாய் நட
அடுத்தவர் தவறுகளை மன்னித்து நட
மதங்கள் என முட்டி மோதாதே
அடுத்தவர் நம்பிக்கைக்கு மரியாதை செய்
மகானாக வாழ தேவையில்லை -நீ
மனிதனாக வாழ்ந்து விடு உலகில்.

**நன்றி**


துரைசிங்கம் சுபாஷினி.
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.
தெல்லிப்பளை.
யாழ்ப்பாணம்.
22வயது.
995282330v
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்.
இரண்டாம் வருட மாணவி.
0754217388